1972 ஆகஸ்ட் 11]

திரு. ஏ. சுப்பிரமணியம் : பழைய கால கட்டடத்துக்குள்ளே ஒலி, ஒளிக் காட்சி அமைப்பதன் மூலம் அந்தக் கட்டடத்திற்கு சேதம் ஏற்படக்கூடும் என்று சில மாதங்களுக்கு முன்னுல் மேல் நாட்டு நிபுணர்கள் அறிக்கை விடுத்திருந்ததை அமைச்சர் அவர்கள் பரிசீலித்துப் பார்த்தார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கோவில்களை புதுப்பிப்பதனுல் கட்டடங்கள் கெட்டுவிடுகின்றன என்ற எண்ணம் தான் வெளியிடப்பட்டிருக்கிறதே தவிர ஒலி, ஒளிக் காட்சி ஏற்பாடு செய்வதன் மூலம் கட்டடங்கள் கெட்டுவிடுகின்றன என்று எந்த விதமான அறிக்கையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

*** 81 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon.** the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether it is a fact that the Union Government have **agreed to instal the "ஒலி, ஒளி" exhibition in Madurai Meenakshi** Temple; and

(*b*) if so, the steps taken to start the exhibition ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) ஆம், மதுரை மீனுட்சி அம்மன் கோவிலில் ரூ. 18 லட்சம் செலவில் ஒரு ஒலி, ஒளிக் காட்சிக்கு அனுமதி தந்திருப்பதாக 1970-ம் ஆண்டு அக்டோபர்-நவம்பரில் மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. இருந்தாலும், தனிப்பட்டவர்களிடத்திலிருந்தும், சங்கங்களிடமிருந்தும் ஒரு வழிபாட்டு இடத்தை அதற்கு உபயோகப்படுத்தக் கூடாது என்ற முறையிடு வந்ததன் பேரில், மதுரையில் வைக்கப்பட இருந்த அந்த ஒலி, ஒளிக் காட்சியை மாமல்லபுரத்திற்கு மாற்றுவதாக 1971-ம் ஆண்டு மே திங்களில் மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரை மீனுட்சி அம்மன் கோவிலில் 6 கால பூஜைக்குப் பாதகம் இல்லாத முறையில் ஒலி, ஒளிக் காட்சி நடத்த முடியும் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அம்மாதிரி கூடாது என்று எந்த ஸ்தாபனங்கள் அரசுக்கு தெரிவித்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சேலத்தில் நடைபெற்ற ஆஸ்திக இந்து மத மகாநாட்டின் சார்பாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினுர்கள். மத்திய அரசு ஒலி, ஒளிக் காட்சியை அப்படிப்பட்ட கோவில்களில் வைக்கக்கூடாது என்று மாற்றி, பல்லவ சரித்திர

சம்பவங்கள் நிறைந்த மாமல்லபுரத்தில் அதை வைக்கவேண்டும் என்று விரும்பினார்கள். அதன் பேரில் ரூ. 18 லட்சம் அவர்களும், ரூ. 2 லட்சம் நாமும் போட்டு, ஆக ரூ. 20 லட்சம் அளவில் அதற்கான வேலைகள் துவங்க இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி: ஆஸ்திகர்கள் சங்கம் அல்லது ரெகுலராக கோவிலுக்குப் போகக்கூடியவர்கள் இதற்கு ஆட்சேபணை பண்ணியதாகத் தெரியவில்லை. ஒலி, ஒளிக் காட்சியைப் பார்க்கிறபொழுது எப்படி டெல்லி ரெட்ஃபோர்ட்டில் அது இருப்பது பிரயோசனகரமாக இருக்கிறதோ, அதே மாதிரி சரித்திர சம்பந்தமான சம்பவங்கள் நிறைந்த கோவில்களுக்குள்ளே நடத்துவது திருப்திகரமான முறையில் அமையும் என்பதை மீண்டும் ஒரு முறையாவது மத்திய அரசுக்கு இந்தக் காரணத்தைக் காட்டி வலியுறுத்துவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்கள் மதுரையில் வைக்கவேண்டும் என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். செங்கோட்டையில் எந்த விதமான பூஜையும் நடப்பதில்லை. அங்கு ஒரு மசூதி மட்டும் தான் இருக்கிறது. வடக்கே இருக்கிற கலாசாரம் வேறு, தெற்கே இருக்கும் கலாசாரம் வேறு என்று வலியுறுத்தச் சொல்லியாவது மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் அந்த ஒலி, ஒளிக் காட்சியை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. கு. திருப்பதி: 6 கால பூஜை நடப்பதற்கு ஆட்சேபணை இருக்கிறது என்றால், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த திருமலைநாயக்கன் மஹாலில், அல்லது அங்கே இல்லாவிட்டால் அதற்காக ஒரு புதிய கட்டடத்தையாவது அமைத்து, அங்கே ஒலி, ஒளிக் காட்சியை ஏற்படுத்துவதற்கு அபிப்பிராயம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மதுரையில் திருமலை நாயக்கன் மஹால், மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆகிய இரண்டும் தான் சரித்திர பிரசித்தி பெற்ற இடங்கள். வேறு எந்த இடத்திலும் ஒலி, ஒளிக் காட்சியை வைத்தால் சரித்திர சம்பந்தமான விவரங்களைச் சொல்லி அந்தக் காட்சியை அருமையாக அமைக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்று திருமலை நாயக்கன் மஹாலில் வைக்கவேண்டும், அல்லது மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் வைக்கவேண்டும். வேறு எந்த இடத்திலும், புதியதாக கட்டடம் கட்டி ஒலி, ஒளிக் காட்சி அமைத்தால் அது சிறப்பு அடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1972 ஆகஸ்ட் 11]

திரு. எம். முத்தையா : ஒலி, ஒளிக் காட்சியை ஆஸ்திகர்கள் எதிர்க்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாஸ்திகர்கள் அதை ஆதரிக்கிறார்கள் என்றால், இந்த சர்க்கார் எதற்கு ஆதரவு கொடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இதில் ஆஸ்திக நாஸ்திக வாதத்திற்கு ஒன்றும் இடமில்லை. மத்தியப் பேரரசு இதிலே தலையிட்டு ரூ. 18 லட்சம் தந்து அதற்கான வேலைகள் தொடங்க இருக்கின்றன. அந்த வகையிலே கோவில்களில் அந்தக் காட்சியை வைக்கக்கூடாது என்று அவர்கள் வற்புறுத்துகிறார்களே தவிர, ஆஸ்திக, நாஸ்திக வாதத்திற்கு இதில் எந்தவிதமான இடமும் இல்லை. வாய்ப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூம்புகாருக்கு சுற்றுலா பேருந்துகள்

*82 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விடுமுறை நாட்களில், சென்னையிலிருந்து பூம்புகாருக்குச் சுற்றுலாப் பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பூம்புகார் பட்டணத்தில் பண்டை தமிழர்களுடைய கலாசாரத்தை பிரதிபலிப்பதற்கான நிலையில் தமிழக அரசு குறிப்பாக அங்கு நல்ல கலைக் கூடங்களுக்கு சிறந்த வாய்ப்புகளை உருவாக்கிவைக்குமா ? இனிமேலாகிலும் அந்தப் பகுதிக்கு அதைச் செய்து கொடுக்க அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, பூம்புகார் பட்டணத்தில் சிலப்பதிகாரத்தின் வரலாற்றைக் கூறுகின்ற சம்பவங்களை வடித்து வைக்கின்ற ஒரு ஏற்பாட்டை தமிழக முதல் அமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அது முடிந்த பிறகு வேண்டுமானால், திரு. கிட்டப்பா அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : கேரள மாநிலத்திலுள்ள கண்ணகி கோட்டத்தில் சேரன் செங்குட்டுவன் படைத்த கண்ணகி சிலை இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த சிலையை இந்தக் கலைக் கூடத்தில் கொண்டு வந்து வைப்பதற்கு அரசு முன்வருமா ?